



# ஜமாலியன் டைம்ஸ்

Since 1951
Show Us The Right Path
தமிழ் மாத இதழ்

இதழ் 7 சுற்று 1 | JAMALIAN TIMES | பிப்ரவரி, 2023





# நமது கல்லூரியில் தமிழ் கனவு, தமிழ் பண்பாட்டு சொற்பொழிவு

## திருச்சி மாவட்ட ஆட்சியர் மற்றும் கவிஞர்கள் பங்கேற்பு













தமிழர் மரபின் வளமையையும் பண்பாட்டின் செழுமையையும், சமூக சமத்துவத்தையும், பொருளாதர மேம்பாட்டிற்கான வாய்ப்புகளையும், இளம் தலைமுறையினருக்கு கொண்டு செல்லும் வகையில் மாபெரும் தமிழ் கனவு, தமிழ் மரபு மற்றும் பண்பாட்டு பரப்புரை நிகழ்ச்சி திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடைப்பெற்றது, திருச்சி மாவட்ட ஆட்சியர் திரு பிரதீப் குமார் தலைமை வகித்து பேசியதாவது,

நமது மரபின் வளமையையும், பண்பாட்டின் செழுமையையும், சமூக சமத்துவத்தையும், பொருளாதார மேம்பாட்டிற்கு வாய்ப்புகளையும். இளம் தலைமுறையினருக்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இந்த மாபெரும் தமிழ் கனவு, தமிழ் மரபு மற்றும் பண்பாட்டு பரப்புரை நிகழ்ச்சி மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி தமிழகம் முழுவதும் நடைப்பெற்று வருகிறது.

உலகின் பல்வேறு பகுதிகளில் செழித்தோங்கிய பண்பாடுகளில் தமிழர் பண்பாடு மிகவும் தொன்மையானது என்பது அனைவரும் அறிந்ததே. தமிழ் மரபின் வளமையையும் , பண்பாட்டின் செழுமையையும் காலந்தோறும் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்த புரிதலையும் வளரும் தலைமுறையினருக்கு முழுமையாக தெரிந்து கொள்ளும் வகையிலும். தமிழர் பண்பாட்டில் கலை, இலக்கியம், கல்வி, இயற்கையுடன் இயந்த வாழ்க்கை முறைகள் ஆகியவற்றை வளரும் தலைமுறையான உங்களுக்கு உணர்த்துவதன் மூலம் நீங்கள் அடுத்து வரும் சந்தியினருக்கு கொண்டு செல்ல முடியும். இதனால் விழிப்புணர்வு உள்ள சமூகம் உருவாகும் . நம் பண்பாட்டின் உயர்ந்த தகவல்கள் தொடர்ந்து பல தலைமுறைகளுக்கு நீடித்து நிலைத்திருக்கும்.

நமது பண்பாட்டின் பெருமையை இளைய தலைமுறைக்கு, குறிப்பாக கல்லூரி மாணவர்களுக்கு உணர்த்துவது தான் ஆரோக்கியமான எதிர்கால சமூக கட்டமைப்பின் ஒரு முக்கியமான பகுதியாகும். எனவே தமிழ் நாடு முழுவதும் உள்ள 100 கல்லூரிகளில் தமிழர்–மரபு நாகரிகமும், தமிழ் நாட்டில் சமூக நீதி, பெண்கள் மேம்பாடு, சமூக பொருளாதர முன்னேற்றம், திசைத்தோறும் திராவிடம், மொழி மற்றும் இலக்கியம், கலை மற்றும் பண்பாடு, தொல்லியல் ஆய்வுகள், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், தமிழகத்தின் தொழில் வளர்ச்சி, தொழில் முனைவுகள் முன்னெடுப்புகள், ஊடகங்களின் தோற்றமும் வளர்ச்சியும். கணினி தமிழ் வளர்ச்சியும் சவால்களும், தமிழ் நாட்டில் சுற்றுலா வாய்ப்புகள், நூற்றாண்டு கண்ட கல்வி புரட்சி மற்றும் அரசின் திட்டங்கள் மற்றும் செயல்படுத்தும் முறைகள் ஆகிய தலைப்புகளின் கீழ் சிறந்த சொற்பொழிவாளர்களை கொண்டு மாபெரும் தமிழ் கனவு சொற்பொழிவு நிகழ்ச்சிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இன்று நடைபெற்று வருகிறது என்றார்.

அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்ற கவிஞர் மனுஷ்ய புத்திரன், கவிஞர் நந்தலாலா மாணவர்களிடையே உரையாற்றினர். இந்நிகழ்வில், சிறப்புரையாற்றியவர்களிடம் சிறந்த கேள்வியை கேட்டு 6 மாணவ, மாணவிகள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் கையொப்பம் இட்ட பாராட்டு சான்றிதழ் கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.முன்னதாக மாணவ மாணவிகள் பார்த்து தெரிந்துக் கொள்ளும் வகையில் கல்வி கடன் மற்றும் தொழில் முனைவோர்கான பயிற்சி திட்டங்கள் குறித்த கண்காட்சி, நான் முதல்வன் திட்டம் தொடர்பான பல்வேறு அரங்குகளை மாவட்ட ஆட்சியர் திறந்து வைத்து பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் ஆர்.டி.ஓ. தவச்செவல்வம். மண்டல கல்வி இணை இயக்குனர் குணசேகரன் ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பொது(பொ) செல்வம் மகளிர் திட்ட இயக்குனர் ரமேஷ்குமார். மாவட்ட தொழில் மையம் பொது மேலாளர் செந்தில் குமார். மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் துறை இயக்குனர் மகாராணி , தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் உதவி இயக்குனர் இஸ்மத்பானு உள்பட பலர் பங்கேற்றனர்.

# சர்வதேச புற்றுநோய் தினம்







திருச்சிராப்பள்ளி, ஜமால் முஹம்மது கல்லூரியில், சர்வதேச புற்றுநோய் தினத்தை முன்னிட்டு 01/02/2023 சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெற்றது, இந்நிகழ்வில் திருச்சி மாவட்ட உதவி ஆணையர் சுரேஷ் குமார் மற்றும் Dr. G.கோவிந்தராஜ் (Managing Director, Harshamitra Super Specialty Cancer Centre and Research Institute, Trichy) ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினர்.

சிறப்பு விருந்தினராக பங்கேற்ற காவல் உதவி ஆணையர் திரு. சுரேஷ் குமார் மாணவர்கள் உடல் ஆரோக்கியம் பேணுவதில் அக்கறை செலுத்த வேண்டும் எனக் கூறினார். மேலும், கல்லூரி விடுதியில் தங்காமல், தனியார் அறைகளில் தங்கும் மாணவர்கள் மிக கவனமாக இருக்கவேண்டும் என்றும் அந்நியர்கள் மற்றும் சமூக விரோதிகள் தங்களை தவறாக பயன்படுத்தி விடாமல் எச்சரிக்கை உணர்வோடு படிப்பில் மட்டும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கூறினார். சாலை விதிகள், சைபர் கிரைம், போக்ஸோ சட்டங்களை குறித்து விவரித்து, காவல் துறை, அனைத்து காலத்திலும், மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும் உதவியாக இருக்கும் என்பதை செயல் வடிவில் (Demo) ஆக நிகழ்த்திக் காண்பித்தார். “காவல் உதவி” செயலியை அனைவரும் தங்கள் தொலைபேசியில் பதிவிறக்கம் செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

ஹர்ஷமித்ரா மருத்துவமனையின் இயக்குனர், டாக்டர் G.கோவிந்தராஜ், புற்றுநோயை உருவாக்குவதில் புகையிலையின் பங்கு அபரிமிதமானது என தனது உரையில் கூறினார். அறிந்தோ அறியாமலோ மாணவ பருவத்தில் விளையாட்டாக பழகும் பழக்கம் வாழ்வை மொத்தமாக அழித்துவிடுகிறது என்று குறிப்பிட்டவர் புற்று நோயாளிகள் சந்திக்கும் கடுமையான வேதனைகளை படங்களோடு விளக்கியது மாணவர்கள் மத்தியில் பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டலில், தமிழகத்திலிருந்து போதைப் பொருள்களை முழுமையாக அப்புறப்படுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு ஜமால் முகமது கல்லூரியில் நடத்தப்பட்ட இந்நிகழ்வில் 700 மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக பகுதி ஐந்து ஒருங்கிணைப்பாளர் எஸ்.ஷேக் இஸ்மாயில் வரவேற்புரை ஆற்றினார். கல்லூரியின் பொருளாளர் ஹாஜி. M.J. ஜமால் முகமது, தன் உரையில் இக்கல்லூரி நீண்ட கால பாரம்பரியம் கொண்டது, இங்கு கல்வி பயின்ற மாணவர்கள் உலகம் முழுவதிலும் பல்வேறு சமூக தொண்டாற்றி வருகின்றனர். எனவே மாணவர்களின் மனதில் உயர்ந்த பண்பாட்டை விதைப்பதில் நிர்வாகம் முழு முயற்சி செய்வதாக குறிப்பிட்டார்.

கல்லூரி முதல்வர் Dr. S.இஸ்மாயில் முகைதீன் தன் தலைமை உரையில் மாணவர்கள் உயர்ந்த ஒழுக்க விழுமியங்களை தங்கள் மாணவப் பருவத்திலேயே பெற வேண்டும் எனவே இந்நிகழ்வு, தனியார் அறைகளில் தங்கி கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்காக தனிச்சிறப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வை போதை ஒழிப்போர் கழகம், பாலின சமத்துவ சங்கம், கல்லூரி முன்னாள் மாணவர் சங்கம் மற்றும் நல் உள்ளங்கள் அமைப்பினர் ஏற்பாடு செய்திருந்தனர்.




Gender Champion Club (Women Section) of Jamal Mohamed College in Tiruchirappalli conducted a workshop on preparation of vermicompost from naturally available agricultural waste, household vegetable waste and leaves on 01.02.2023.



Mr. J. Ranjith Kumar of II B.A English Literature, Jamal Mohamed College represented Tamil Nadu in the 26th National Youth Festival 2023 held at Hubballi-Dharwad, the twin cities of Karnataka from 12th to 16th January 2023.



KARATE CHAMPIONSHIP
at 4.30 p.m. on 24.02.2023 in the College Garden




Campus Recruitment Drive – OMEGA
at 11.00 a.m. on 08.02.2023 at MBA Seminar Hall




நான் முதல்வன் உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்பு வழிகாட்டி
தமிழ்நாடு அரசு – பள்ளிக்கல்வித்துறை
at 10.30 a.m. on 25.02.2023 in the Physics Seminar Hall




Campus Interview - NIPPON PAINT
at 11.00 a.m. on 13.02.2023 in the MBA Conference Hall



VOLLEY BALL CHAMPION
at 12.30 a.m. on 09.02.2023 in the College Garden

ஜமாலியன் டைம்ஸ்
தமிழ் மாத இதழ்

**ஆசிரியர்**
முனைவர். எஸ். இஸ்மாயில் முகைதீன்
M.Sc., M.Phil., PGDCA., Ph.D.,
கல்லூரி முதல்வர்

**செய்தி ஆசிரியர்**
முனைவர். A.R. முஹம்மத் ஷாநவாஸ்
M.Sc.,PGDCA.,M.Ed.,M.Phil.,Ph.D.,

**இணை ஆசிரியர்கள்**
K. சண்முக வேலாயுதம் M.A., M.Phil.,SET.,
R. ராஜேஷ்குமார் M.A., M.Phil.

**ஆசிரியர் குழு**
**உதவிப் பேராசிரியர்கள், காட்சித் தொடர்பியல் துறை**
B. ராமகிருஷ்ணன் M.F.A.,M.Phil.,
முனைவர் S. ரகுநாதன் M.A., PGDAPR., MA., Ph.D.,
D. பிரதீபன் M.Sc., SET.,
G. பரணீதரன் M.Sc.,
H. முஹம்மத் பயாஸ் M.Sc.,
**மாணவர்கள், காட்சித் தொடர்பியல் துறை**
V. சிவகுமார், A. முகமது அய்மன்

**நிருபர்கள்**
K. காவியச்செல்வன், R. வெற்றி செல்வன்,
P. பிரபு மணிகண்டன், T.M. கரண்

**ஒளிப்படக் கலைஞர்கள்**
K. அரவிந்த் குமார், J. டென்சில் டொமினிக்,
S. அருண்குமார், R.பாலசுப்ரமணியன்

**தொடர்புக்கு**
காட்சித் தொடர்பியல் துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி – 620 020

காட்சித் தொடர்பியல் துறையின் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக வெளியிடப்படும் ஜமாலியன் டைம்ஸ் மாத இதழ் தொடர்ந்து வெளிவர தங்களின் கருத்துக்கள், படைப்புகள், மற்றும் துறை செய்திகளை எங்களுக்கு அனுப்பவும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**
துறைத்தலைவர்
காட்சித் தொடர்பியல் துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி – 620 020
jmcviscom@gmail.com

மாணவர்களின் பயிற்சிக்காக வெளியிடப்படும் இந்த இதழில் வரும் கருத்துக்கள் அனைத்தும் துறையின் கருத்தல்ல.

‘ஜமாலியன் டைம்ஸ்’ மாத இதழுக்கு தொடர்ந்து ஆதரவளித்து வரும் மக்கள் குரலுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

ஜமாலியன் டைம்ஸ் மாத இதழ் பப்ளிகேஷன்ஸ் சார்பாக அச்சிடுவோர்
மக்கள் குரல் நடுநிலை நாளேடு TRINITY MIRROR

**துறைத் தலைவர்கள் பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகளுக்கு ஒரு வேண்டுகோள்**

ஜமாலியன் டைம்ஸ் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது உங்கள் கருத்துக்களை தமிழில் எழுதி கடிதம் மூலமாகவோ அல்லது ஈ-மெயில் மூலமாகவோ அனுப்பலாம். அனுப்ப வேண்டிய முகவரி

ஆசிரியர்,
ஜமாலியன் டைம்ஸ்,
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சி – 620020
jmcviscom@gmail.com

பொருளியல் துறை சார்பில்

## ஒன்றிய அரசின் நிதிலை அறிக்கை (பட்ஜெட்)

குறித்த விவாத நிகழ்ச்சி



திருச்சிராப்பள்ளி, ஜமால் முகமது கல்லூரியின் முதுகலை மற்றும் ஆராய்ச்சித்துறையான பொருளியல் துறை 6 பிப்ரவரி, 2023 அன்று ஒன்றிய அரசின் நிதிலை அறிக்கை (பட்ஜெட்) குறித்த விவாத நிகழ்ச்சியை நடத்தியது. பட்டயக் கணக்காளர், பங்குத்தரகர் மற்றும் தொழில் முனைவோர் (ஸ்ரீசக்ராஇண்டஸ்ட்ரீஸ்), திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த திரு. எஸ். அசோக் சுந்தரேசன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று மாணவர்களிடையே உரையாற்றினார். அவர் தன் உரையில், பட்ஜெட் பற்றிய அடிப்படைகளை விவரித்து, ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் எந்தெந்த துறைக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்கிறது மற்றும் அதன் விளைவுகள் குறித்து விவரித்தார். விவசாயம், தொழில், தகவல் தொடர்பு ஆகிய துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஆதாரங்கள் குறித்தும் விவாதித்தார். மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் உரை நிகழ்த்தியவர், 2022 ம் ஆண்டின் பட்ஜெட்டின் சாதனைகளையும், தற்போதைய பட்ஜெட்டின் தொடர்ச்சியினையும் ஆய்வு செய்து அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். முன்னதாக, பொருளியல் துறைத் தலைவர் முனைவர் பு.மூ. ஹாஜா மொஹிதீன் அனைவரையும் வரவேற்றார். கல்லூரியின் பொருளாளர் ஹாஜி னி. ஜமால் முகமது மற்றும் துணைச் செயலர் லு. அப்துஸ் சமது வாழ்த்துரை வழங்கினர். பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் 150க்கும் மேற்பட்டோர் பங்கேற்று பயன்பெற்றனர்.

## தலைமுறைகளுக்கிடையேயான பிணைப்பு




திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் முதுகலை சமூகப் பணித்துறை உன்னத் பாரத் அபியான் திட்டம் மற்றும் அருவி முதியோர் இல்லம் இணைந்து "தலைமுறைகளுக்கிடையேயான பிணைப்பு" என்ற தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி பிப்ரவரி 21, 2023 அன்று திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் உன்னத் பாரத் அபியான் திட்டத்தின் கல்லூரி விரிவாக்க பணிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமமான திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள மண்ணச்சநல்லூர் கிராமத்தில் உள்ள அரசு மாதிரி பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஜமால் முகமது கல்லூரி முதுகலை சமூக பணித்துறை முதலாமாண்டு மாணவி மு.பிரியங்கா வரவேற்புரை ஆற்றினார், மண்ணச்சநல்லூர் கிராமத்தில் உள்ள அரசு மாதிரி பெண்கள் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் திரு. லு. முத்துச் செல்வன் அவர்கள் தலைமை உரை ஆற்றினார். திருமதி.ஊ. மணிமாலா விவேக் ( பிரியம் மருத்துவமனை நிறுவனர், பெரம்பலூர்,) "தலைமுறைகளுக்கிடையேயான பிணைப்பு" என்ற தலைப்பில் மாணவிகளுக்குசிறப்புரையாற்றினார். அருவி முதியோர் இல்லத்தின் நிறுவனர் திரு.றீ.சையத் தஹா அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் முதுகலை சமூக பணித்துறையின் உதவி பேராசிரியர் முனைவர். அ. சேக் அப்துல் சலாம் அவர்களின் ஆலோசனையோடு முதுகலை சமூகப் பணித்துறையின் முதலாம் ஆண்டு மாணவி செல்வி மு. பிரியங்கா அவர்கள் இந்நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்தார் இந்நிகழ்ச்சியின் மூலமாக ஏறத்தாழ சுமார் 50க்கும் மேற்பட்ட மற்றும் மாணவிகள் பங்கு

பெண்கள் பிரிவில் தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் கணினி அறிவியல் துறை சார்பில்

## C#.NET என்னும் தலைப்பில் இரண்டு நாள் பயிற்சி பட்டறை



திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது பெண்கள் பிரிவில் தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் கணினி அறிவியல் துறை சார்பில் பிப்ரவரி 22,&23 ஆகிய இரு நாட்கள் C#.NET என்னும் தலைப்பில் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பிஷப் ஹீபர் கல்லூரியின் தகவல் தொழில்நுட்பத் துறை உதவிப் பேராசிரியர் திருமதி பி உஷா அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். முதல் நாள் அமர்வில் ஸீதூ இன் அடிப்படைகளையும், அதன் பயன்பாடுகளையும் செய்முறையோடு விளக்கிக் கூறினார். இறுதியில் மாணவிகளுக்கு வினாடி வினாவும் நடத்தப்பட்டது இரண்டாம் நாள் அமர்வில் தரவுத்தள இணைப்பைப் பற்றி எடுத்துக் கூறி அதற்கான பயிற்சியும் அளித்தார்.

இந்நிகழ்வில் கல்லூரி செயலாளர் முனைவர். அ.கா. காஜா நஜிமுதீன், உதவிச் செயலர் முனைவர் க. அப்துல் சமது, பொருளாளர் ஹாஜி எம். ஜே. ஜமால் முகமது, கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன், துணை முதல்வர் முனைவர் அ. முகமது இப்ராஹிம், கூடுதல் துணை முதல்வர் முனைவர். எம். சிகாபுதீன், நிர்வாகக் குழு உறுப்பினர் மற்றும் கௌரவ இயக்குனர் முனைவர் க.ந.அப்துல் காதர் நிஹால், விடுதி இயக்குனர் முனைவர் கே.என். முகமது பாசில், பெண்கள் விடுதி இயக்குனர் திருமதி .ஜெ .ஹாஜிரா பாத்திமா ,பேராசிரியர்கள் மற்றும் துறை சார்ந்த மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

உலக தாய்மொழி தினத்தை முன்னிட்டு

## "தமிழே நீ ஒரு பூக்காடு" என்னும் தலைப்பில் சிறப்புரை





திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரி தமிழாய்வுத்துறை சுயநிதி பெண்கள் பிரிவின் சார்பில் (21.02.2023) செவ்வாய் அன்று உலக தாய்மொழி தினத்தை முன்னிட்டு சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ஜமால் முகமது கல்லூரியின் தமிழாய்வுத்துறை சுயநிதி ஆண்கள் பிரிவின் உதவிப் பேராசிரியர் து.பிரபாகரன் அவர்கள் கலந்து கொண்டு "தமிழே நீ ஒரு பூக்காடு" என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

அவர் தம் உரையில் தாய்மொழி தினத்தின் சிறப்பு பற்றியும், தாய்மொழியின் மேன்மை குறித்தும் எடுத்துரைத்தார் . மேலும் கவிஞர் காசி ஆனந்தன் கவிதைகளை எடுத்துக் கூறி தாய் மொழியை தெரிந்து கொள்வதற்கு முன் மற்ற மொழிகளையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தினார். ஒவ்வொரு தினங்களை போற்றுவதோடு மட்டுமல்லாமல் அத்தினங்களுக்கு உரியவர்களையும் கொண்டாட வேண்டும் எனவும் எடுத்துத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி செயலாளர் முனைவர். ஏ.கே காஜா நஜீமுத்தீன்,உதவிச் செயலர் முனைவர் கே. அப்துல் சமது, பொருளாளர் ஹாஜி எம். ஜே. ஜமால் முகமது, கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன், துணை முதல்வர் முனைவர்.ஏ. முகமது இப்ராஹிம், கூடுதல் துணை முதல்வர் முனைவர். எம். சிகாபுதீன், தமிழாய்வுத் துறைத் தலைவர் மற்றும் தேர்வு நெறியாளர் முனைவர் அ.சையத் ஜாஹிர் ஹசன், சுயநிதி ஆண்கள் பிரிவு பொறுப்பாளர் முனைவர் க.இக்பால்,நிர்வாகக் குழு உறுப்பினர் மற்றும் கௌரவ இயக்குனர் முனைவர் கே.என்.அப்துல் காதர் நிஹால், விடுதி இயக்குனர் முனைவர் கே.என். முகமது பாசில், பெண்கள் விடுதி இயக்குனர் திருமதி .ஜெ .ஹாஜிரா பாத்திமா, தமிழ்த்துறை பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## PHYSICS LAB OPENING

AT 10.30 A.M. ON 25.02.2023 IN THE PHYSICS SEMINAR HALL







## PUTHUMAI PEN SCHOLARSHIP SCHEME – 2ND PHASE

AT 12.30 A.M. ON 08.02.202





# ஒருநாள் சர்வதேச கருத்தரங்கு






கடந்த 22 பிப்ரவரி 2023 அன்று பேஷன் டெக்னாலஜி மற்றும் ஆடைவடிவமைப்பு மற்றும் B.Voc ஆடை மற்றும் பேஷன் டிசைனிங் துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட "நிலைத் தன்மை மற்றும் ஃபேஷன் தொழில்துறைக்கான உலகளாவிய முன்னறிவிப்பு" என்ற தலைப்பில் ஒருநாள் சர்வதேச கருத்தரங்கு. தொடக்க விழா காலை 10 மணிக்கு கிராத் மற்றும் தமிழ்த்தாய் வாழ்த்துகளுடன் தொடங்கியது, ஒருங்கிணைப்பாளர் டாக்டர் எம்.அனீஸ் முகமது வரவேற்றார். பர்சார் மற்றும் எம் சி ஏ இயக்குநர், விழாவுக்குத் தலைமை வகித்தார். தொடக்க உரையை செல்வி.ஜெயகுமாரி பெர்சனல் ஸ்டைலிஷ் மற்றும் நிறுவனர், ஜெயக்குமாரி ஸ்டைலிங் சர்வீசஸ், பெங்களூரு வழங்கினார். நன்றியுரையை துறை ஒருங்கிணைப்பாளர் திருமதி ஏ. ஜி. மீரா வழங்கினார் பேராசிரியர். முதல் தொழில் நுட்ப அமர்வு காலை 11.30 மணிக்குத் தொடங்கியது. நியூயார்க்கில் இருந்து நிலையான கதை சொல்பவர், நிலையான பாணியில் உங்கள் மகிழ்ச்சியைக் கண்டறிவது பற்றி பேசினார். மதிய உணவுக்குப்பிறகு. சர்வதேச கருத்தரங்கின் கடைசி அமர்வில் தர மேலாளர் சதீஷ் குமார் பங்கேற்றார். அய்மான் கல்லூரியைச் சேர்ந்த பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் கருத்தரங்கில் பங்கேற்றுள்ளனர் மற்றும் மொத்தம் 300 மாணவர்கள் கருத்தரங்கில் பங்கேற்றுள்ளனர். கருத்தரங்கின் பாராட்டு விழா மாலை 4.30 மணிக்கு தொடங்கியது. நன்றியுரையை டாக்டர். எம். முகமது சிஹாபுதீன் கூடுதல் துணை முதல்வர் வழங்கினார். இறுதியாக பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

INTERCOLLEGIATE COMPETITION

## NATIONAL SCIENCE DAY CELEBRATION - 2023









திருச்சிராப்பள்ளி மாவட்ட தொழில் மையம் ஜமால் முகமது கல்லூரியில் நடத்திய

## சுய வேலைவாய்ப்பு திட்டங்கள் குறித்த ஊக்குவிப்பு முகாம்












## STUDENTS CORNER



Winners in VIT University State Level Invitation volleyball Tournament



Winners in IOB Rolling trophy State level invitation volleyball tournament



Winners in Karaikudi Alagappa University State Level Basketball Alumini Tournament



Winners in Trichy St.Joseph's College Centenary Volleyball Tournament



Winners in South India level invitation volleyball tournament held at Gudalur



Winners in Trichy St.Joseph's College Centenary Ball Badminton Tournament

Runner up in PSG trophy state level inter collegiate ball badminton tournament.